DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
NAGAPATTINAM.
S.C.42/19 P.W. 7

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name . திரு. பாலு | Father & Husband Name. |
| Village. | Taluk. |
| Calling. | Age. |
| Date: 12.09.2018 | |

Thiru N. Manivannan, B.A., B.L., Chief Judicial Magistrate, Nagapattinam Solemnly affirmed in accordance with the provision of Act X, of 1873 day of 12.09.2018

முதல் விசாரணை

நான் செண்பகராயநல்லூர் என்ற ஊரில் குடியிருந்து வருகிறேன். ஆட்டோ ஓட்டிவருகிறேன். எதிரிகளுக்கும் அசா.1 குடும்பத்திற்கும் இடையில் பிரச்சனை இருந்துவந்தது. அவர்களுக்கு இடையே பிரச்சனை நடந்ததாக கேள்விப்பட்டேன். பிரச்சனையை நான் பார்க்கவில்லை. சில வருடங்களுக்கு முன்பு 9வது மாதம் 12ந் தேதி போலிசார் எங்கள் ஊர் சந்தை அருகில் என்னை விசாரணை செய்தார்கள். இந்த வழக்கு சம்பவம் சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். போலிசார் வேறு எதுவும் அங்கு செய்வில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையதுதான். சம்பவம் இந்த இடத்தில்தான் நடந்ததா என்று கேட்டு என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். பார்வை மகசரில் உள்ள எனது கையெழுத்து அதசாஆ.5ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசுதரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பிறழ் சாட்சியாக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

12.09.2010 அன்று எதிரிக்கும் அசா.1 குடும்பத்திற்கும் தகராறு நடந்ததாக கேள்விப்பட்டேன். அந்த சம்பவம் சம்மந்தமாக போலிசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வந்து போலிசார் என் முன்னிலையில் பார்வை மகசர் தயார் செய்து என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரியல்ல. போலிசார் என் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்து என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் என்றும் தற்போது அதை மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S.C.42/19 P.W. 7

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

அசா.1க்கும் எதிரிகளுக்கும் இடைய என்ன பிரச்சனை என்று எனக்கு ஒன்றும் தெரியாது. பிரச்சனை என்னவென்றும் எனக்கு தெரியாது. அதை யாரோ சொல்லி கேள்விப்பட்டேன். நான் பார்வை மகசரில் எங்கு வைத்து கையெழுத்து போட்டேன் என்று கேட்டால் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்துப்போட்டேன்.

மறுவிசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE
NAGAPATTINAM.
S.C.42/19 P.W. 8

Deposition of witness for Prosecution:

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.என்.எஸ். ராஜேந்திரன் | Father's / Husband Name . சாமி அய்யா | |
| Village | : | Taluk | : |
| Religion | : | Age | : |
| Date | :09.08.2019 | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 9.08.2019.

முதல் விசாரணை.

நான் தற்போது நாகூரில் ஆய்வாளராக பணிபுரிந்து 2018 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளேன். நான் தற்போது திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பணியில் இருந்த காலத்தில் வேதாரண்யம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது கரியாப்பட்டினம் காவல் நிலையம் கூடுதல் பொறுப்பு வகித்து வந்தேன். அப்போது 12.09.2010 அன்று உதவி ஆய்யவாளர் வனிதா என்பவர் வழக்கு பதிவு செய்த குற்ற எண்.181/2010 சட்ட பிரிவு 294(பி), 324, 307 இதச பிரிவு வழக்கினை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று காலை 7 மணிக்கு செண்பகராயநல்லூர் சென்று சாட்சிகள் பாலு, பாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் அதசாஆ.6 ஆகும். மாதிரி வரைபடம் அதசாஆ.7 ஆகும். சாட்சிகள் விஜயா, பன்னீர்செல்வம், ராமலிங்கம் மகன் பன்னீர்செல்வம், செந்தமிழ்செல்வன், ராகவன், சாம்பசிவம், வசந்தா, பாலகிருஷ்ணன் மகன் சுப்பிரமணியன், பாலு, முனியன் மகன் சுப்பிரமணியன், கண்ணன் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 13.9.2010 அன்று வழக்கின் 2வது எதிரியான செண்பகராமனை காலை 6 மணியளவில் தென்னம்புலம் கடைதெருவில் வைத்து காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் பன்னீர்செல்வம், கண்ணன் ஆகியோர் முன்னிலையில் செண்பகராமன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் எதிரி தானாக முன்வந்து எந்த அச்சுறுத்தலும் இல்லாமல் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். தன்னை அழைத்து சென்றால் சம்பவ இடத்தை காட்டி மறைத்து வைத்துள்ள சவுக்கு கட்டையை எடுத்து ஆஜர் செய்கிறேன் என்று ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறினார். அது ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அதசாஆ.8 ஆகும். அவர் சொன்னவாறு அதே சாட்சிகளுடன் எதிரி செண்பகராமனை அவருடைய வீட்டிற்கு கூட்டி சென்று எதிரியின் வீட்டின் பின்புறமுள்ள கூரையில் இருந்து சுமார் 63 செமி நீளமுள்ள 4 செமீ விட்டம் உள்ள எதிரி எடுத்து ஆஜர் படுத்திய சவுக்கு கட்டையை நான் கைபற்றுதல் மகசர் தயார் செய்து கைபற்றினேன். அந்த கைபற்றுதல் மகசர் அதசாஆ.9 ஆகும். செண்பகராமன் எதிரியை காவல் நிலையம் கொண்டுவந்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். எதிரி எ1, குஞ்சி என்ற வெற்றிவேல், எ2 சக்திவேல் ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று சென்றுவிட்டனர்.

அதன் பின்னர் கைபற்றப்பட்ட வழக்கு சொந்தான சவுக்கு கட்டையை படிவம் 95ன் படி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளேன். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் சவுக்கு கட்டை சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டு எதிரி எடுத்து ஆஜர் படுத்திய சவுக்கு கட்டையாகும். அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான பவடிம் எண்.95 அதசாஆ.10 ஆகும். அதன் பின்னர் சாட்சிகள் பன்னீர்செல்வம், கண்ணன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அசா1னுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்கள் டாக்டர் அன்வர்சாதிக், டாக்டர் ராம் இளவழகன், டாக்டர் செந்தில்குமார், டாக்டர். ரெத்தினசபாபதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இருந்து எங்கள் காவல் நிலையத்திற்கு இன்டிமேஷன் கொடுத்த சிறப்பு உதவி ஆய்வாளர் பாண்டியனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அதன் பின்னர் கரியாப்பட்டினம் காவல் நிலையத்திற்கு நிரந்தர ஆய்வாளர் நியமனம் செய்யப்பட்டதால் நான் என் விசாரணை கோப்புகளை ஆய்வாளர் மகேந்திரனிடம் ஒப்படைத்தேன்.

எதிரிதரப்புக் குறுக்கு விசாரணை.

முதல் விசாரணையில் கூறியபடி சம்பவ இடம் சென்று வரைபடம், பார்வை மகசர் தயார் செய்ததாக கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. மேலும் அவை காவல் நிலையத்திலேயே கற்பனையாக தயார் செய்தது என்றால் சரியல்ல. மேலும் முதல் விசாரணையில் கூறியபடி வரைபடம் மற்றும் பார்வை மகசருக்காக சாட்சியமாக மேற்படி சாட்சிகளிடம் சம்பவ இடத்தில் சாட்சியமாக கையொப்பம் பெற்றதும் பொய் என்றால் சரியல்ல. இந்த கையெழுத்து எல்லாம் காவல் நிலையத்திலேயே பெற்றது என்றால் சரியல்ல. அதுபோல் வழக்கிற்கு பின்னிட்டு கூடுதல் சாட்சியமாக கூடுதல் சாட்சிய விபரங்கள் அனைத்தும் கற்பனையாக என்னால் வழக்கிற்கு ஜோடனையாக செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அச்சாட்சியங்கள் எல்லாம் சம்பவ இடத்திற்கு சென்று உரிய விசாரணை செய்து அவ்வாக்குமூலங்களின்படி பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அதுபோல் இவ்வழக்கின் 2ம் எதிரி செண்பராமனை தென்னம்புலம் கடைதெருவில் வைத்து கைது செய்ததாக கூறப்படும் சம்பவம் பொய் என்றால் சரியல்ல. சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அதுபோல் இந்த எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. அது வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதுபோல் முதல் விசாரணையில் கூறப்பட்டுள்ள சா.பொ.1 என்ற எதுவும் 2ம் எதிரியால்ட காண்பிக்கப்படவில்லை என்றும் அது வகைக்கு கைப்பற்றப்படவில்லை என்றும் அது வழக்கின் தோதிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கானது முன்ஜோடனையாக பொய்யாக எதிரிகள் பேரில் தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது வழக்கு

பொய்யாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள மருத்துவரிடம் பெறப்பட்ட அறிக்கைகள் அனைத்தும் இவ்வழக்கிற்கு தகுந்தார்போல் அரசுக்கு ஆதரவாக அவர்களிடமிருந்து பெறப்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.